1990 மே 7

திரு. ஆர். மகேந்திரன் : தலைவர் அவர்களே, பல ஊராட்சி மன்றங்களில் மிகவும் மோசமான நிலையில் உள்ள மின்கம்பங்களை எல்லாம் மாற்றிவிட்டு புதியதாக போட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி பல ஆண்டுகளாகியும் புதிய கம்பங்கள் அமைக்கப்படாமல் இருக்கிறது. எனவே, அவற்றை மாற்றிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இது தஞ்சை மாவட்டத்தில் புயலால் சாய்ந்து போன மின் கம்பங்களைப் பற்றிய கேள்வியாகும். நின்று கொண்டிருக்கிற மின்கம்பங்களைப் பற்றியது அல்ல. எனவே, சாய்ந்த கம்பங்களை நிமிர்த்தி விட்டு, அடுத்தப்படியாக நின்று கொண்டிருக்கிற கம்பங்கள் மீது கவனத்தை செலுத்துவோம்.

வேலை பார்க்கும் பெண்கள் விடுதி.

3230—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடியில் வேலை பார்க்கும் பெண்கள் விடுதி கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மகளிருக்கு சுய வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம்.

5014—திரு. கே. ரவி அருணன் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மகளிருக்கு சுயவேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் கீழ் பனை நார் பெட்டி முடைதல், அப்பளம் வடகம் தயார் செய்தல், வயர் கூடை பின்னுதல் போன்ற தொழில்களுக்கும் கடன் மற்றும் மானியம் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்.?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மகளிருக்கு சுயவேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம் தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

திரு. கே. ரவி அருணன் : தலைவர் அவர்களே, மகளிருக்காக சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஆட்டோ ரிக்ஷா வழங்கும் திட்டம் இந்த ஆண்டு நெல்லை மாவட்டத்திற்கு விரிவுபடுத்தப்படுமா? சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வரும் இலவசமாக தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டத்தில் மனு செய்த அனைவருக்கும் அவை கிடைப்பதில்லை. ஆகவே தையல் இயந்திரங்கள் வாங்குவதற்கு அவர்களுக்கு மானியத்தோடு கடனுதவி வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஆட்டோ ரிக்ஷா வழங்கும் திட்டத்தை இந்த அரசு முதன்முதலாக சென்ற ஆண்டு அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டத்தை சென்னையில் முதலில் பரிட்சித்துப் பார்க்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு ஆறு பெண்கள் தான் இந்தத் திட்டத்தில் சேர முன்வந்தார்கள். ஆட்டோ ரிக்ஷா ஓட்டுவதற்கான பயிற்சி அவர்களுக்கு தரப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆட்டோ ரிக்ஷா வாங்குவதற்கான தொகையை வங்கிகளில் பெறுவதில் சிக்கல் இருக்கிற காரணத்தால் இந்தத் திட்டத்தை வேறு மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கும் எண்ணம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை தையல் இயந்திரங்களைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பெண்கள் ஏராளமாக தையல் இயந்திரங்கள் கேட்டு விண்ணப்பம் செய்கிறார்கள். சமூகநலத் துறையின் மூலமாக தமிழ்நாடு முழுவதும் எல்லா மாவட்டங்களுக்கும் சேர்த்து மொத்தம் 1,200 தையல் இயந்திரங்களைத் தான் வழங்குகிறோம். அந்த இயந்திரங்களை மாவட்டவாரியாக 100, 200 என்று பிரித்து தருகிறோம். இருக்கிற தேவையை கருத்திற்கொண்டு வருகிற ஆண்டுகளில் கூடுதலாக தையல் இயந்திரங்களை வாங்க வேண்டுமென்று அரசு பரிசீலித்து வருகிறது. சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் பெண்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாக குறைந்த வட்டிக்கு எல்லா தொழில்களுக்கும் கடன் வழங்குகிறோம். அந்தத் திட்டத்தின் அடிப்படையிலும் தையல் இயந்திரங்களை வாங்குவதற்கு பெண்களுக்கு வாய்ப்பு உண்டு.

1990 மே 7

9-35 மணி

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய மகளிர் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டம் இந்த ஆண்டு நெல்லை மாவட்டத்திற்கு விரிவுபடுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் குழந்தைகள் மேம்பாட்டுக் கழகம் எல்லா மாவட்டத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து, தன்னுடைய பணியை நிறைவு செய்து வருகிறது. எனவே விஸ்தரிக்கிற திட்டம் பரிசிலனையில் இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்த மகளிர்களுக்கு சுயவேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய திட்டத்தின் கீழ் தையல் இயந்திரங்களை பெறக்கூடியவர் களுக்கு வயது வரம்பு இவ்வளவுதான் இருக்க வேண்டும் என்று ஒரு வரம்பு விதிக்கப்பட்டு இருப்பதாக சொல்லப்படுகிறது. 40 வயது ஆகிவிட்டது, ஆகவே உங்களுக்கு தையல் இயந்திரம் வழங்கப்படமாட்டாது என்று பதில் வருகிறது. இதிலே என்ன வயது வரம்பு? தையல் இயந்திரத் தொழிலைப் படித்தவர்கள் அந்தத் தையல் தொழிலைச் செய்து, ஏதாவது பீழைப்பு தேடவேண்டும் என்று, கணவனால் கைவிடப்பட்ட அல்லது ஏதா வது ஒரு வகையிலே வாழ்க்கையை நடத்தவேண்டும் என்று விரும்புகிற பெண்களுக்கு இந்த விதிமுறைகளைத் தளர்த்தி, இந்தத் தையல் இயந்திரத்தை அவர்களுக்கும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதோடு, இந்த மாதிரி செய்யக்கூடிய இந்தத் தொழிலிலே போட்டி முடைதல் மற்றும் அந்த வேலைகளிலே செய்யக்கூடிய பொருட்களை வாங்குவதற்கு — அவர்கள் விற்க முடியாமல் இருக்கிறார்கள்— அதை வாங்கி விற்பதற்கு அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவசமாக தையல் இயந்திரங் கள் வழங்கப்படுவதால், சில விதிமுறைகளைக் கடைப்பிடிக்கி றோம். காரணம் தவறான முறையிலே அந்த இயந்திரங்கள் யாரிடமும் போய்ச் சேர்ந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான். இப்படி தையல் இயந்திரங்களை இலவசமாக பெற்று. அந்தத் துறையிலே ஈடுபடுகிற பெண்களுக்கு எதிர்காலத்தில் வேலை வாய்ப்பு தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் மாவட்டந்தோறும் தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் என்று ஒரு அமைப்பை ஏற்படுத்தி, இதைப்போன்று வறுமைக் கோடடுக்குக் கீழே வாழ்கின்ற இந்தப் பெண்களை அதிலே நிரந்தரமாக சேர்ந்து, பள்ளிக் குழந்தைகளுக்கு அரசு அறிவித் திருக்கிற இலவச சீருடைகளைத் தைக்கின்ற பணி அவர்களுக்கு

வழங்கப்படுகிறது. இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் வரையில் அவர்களுக்கு வருமானம் பெறக்கூடிய வாய்ப்பும் ஏற்படுத்தித் தரப்பட்டு இருக்கிறது. 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தையல் இயந்திரங்கள் கிடைப்பதில் ஏதேனும் சிரமங்கள் இருக்குமானால், அதைப் போக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மகளிர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் சாக்கு கட்டிகள் தயாரித்தல், அப்பளம் தயாரித்தல் போன்ற தொழில்களை எல்லாம் செய்கிறார்கள். ஆனால் அந்தப் பொருட்கள் எல்லாம் உற்பத்தி செய்யப்பட்டு மாத இறுதியில் விற்காமல் போனால் அவர்கள் ஊதியம் பெறுகின்ற வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே அந்த மகளிர் உற்பத்தி செய்கின்ற பொருட்களை சமூகநலத்துறை ஏற்று, மாதாமாதம் அவர்களுக்கு உரிய வகையில் ஊதியம் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிற இந்தக் கடன் உதவிகள் இரண்டு வகையிலே வழங்கப்படுகின்றன. ஒன்று கூட்டுறவு அமைப்பின் மூலமாக வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கக்கூடிய பெண்களை அந்த அமைப்பில் கொண்டுவந்து, அதன் மூலம் இந்தச் சாக்கட்டி தயாரித்தல், அப்பளம் தயாரித்தல் போன்ற பணிகள் தரப்படுகின்றன. கூட்டுறவு அமைப்பின் மூலம் செயல்படுகிற அந்தச் சங்கங்களில் உற்பத்தியாகிற அந்தப் பொருட்களை நாங்களே நேரடியாக ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் தனிப்பட்ட முறையில் அரசிடம் கடன் உதவி பெற்று, தொழில் செய்கின்ற பெண்களிடமிருந்து நேரடியாக அரசு கொள்முதல் செய்ய முடியாது. மார்க்கெட்டிங் வசதி என்ன இருக்கிறது என்பதைப் பார்த்து, தேர்வு செய்து, அவர்கள்தான் இந்தத் துறையிலே தங்களை ஈடுபடுத்திக் கொள்ள முன்வரவேண்டும். கூட்டுறவுச் சங்கங்களிலே உற்பத்தி செய்கின்ற பொருட்களை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

விக்ரம் சாராபாய் தொழிற்பேட்டை.

9057— திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) திருவான்மியூர் விக்ரம் சாராபாய் தொழிற்பேட்டையில் உள்ள தொழிற்கூடங்களில் தவணை முறை மற்றும் வாடகைத் திட்டங்களில் உள்ளவை எத்தனை